DEPOSITION OF WITNESS.
(Chapter XXV, B.N.S.S)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, ANDIPATTI

Case No. Cr.L.M.P. No.4854/2024
Deposition of

| | | |
|---|---|---|
| Name | : | திரு.முத்துராஜ் |
| Father's / Husband Name | : | ஒச்சாமூப்பர் |
| Village | : | தெப்பம்பட்டி |
| Taluk | : | ஆண்டிபட்டி |
| Calling | : | விவசாயம் |
| Religion | : | இந்து |
| Age | : | 50 |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 25.06.2025.

**நிரூபண வாக்குமூலம்**

1.) நான் மேற்கண்ட முகவரியில் குடியிருந்து விவசாய வேலை செய்து வருகிறேன். மனோகரன் மற்றும் கணேஷ்குமார் ஆகியோர் என் நிலத்திற்கு அருகே நிலம் வாங்கியுள்ளார்கள். என் நிலம் அவர்களின் நிலத்திற்கு மேற்கே உள்ளது. என்னிடம் வந்து அவர்கள் இடத்திற்கு பாதை வேண்டும் என்று கேட்டார்கள் நான் முடியாது என்று மறுத்துவிட்டேன். பின்பு 5 மாதம் கழித்து என் நிலத்தில் இருந்த மாமரம், இலவம்பஞ்சு மரம், தென்னை மரம், புளிமரம் ஆகிவற்றை எனக்கு தெரியாமல் அகற்றிவிட்டார்கள்.

2.) அதன் பின்பு நான் சென்று அவர்களிடம் கேட்டபோது நான் என் இடத்தினை தான் சுத்தம் செய்கிறேன் உனக்கு இங்கே எங்கு இடம் இருக்கிறது என்று கேட்டார்கள். நான் புகார் அளிக்க இராஜதானி காவல் நிலையம் சென்றேன். அங்கு சார்பு ஆய்வாளர் முஜிபர் ரஹ்மான் உன் நிலத்தின் ஆவணங்களை கொண்டு வா என்று கூறினார். நான் தண்டத்தீர்வை ரசீதினை ( B Memo) காட்டினேன். அவர் அதை பார்த்துவிட்டு உனக்கு உரிமை கிடையாது நீ இந்த இடத்தை விட்டு

வெளியேறு இல்லை என்றால் உன்னை ரிமாண்ட் செய்து விடுவேன் என்று கூறி போடா கோத்தா, கொம்மா என்று அசிங்கமாக பேசினார். நான் அரசாங்கம் கேட்டால் என் இடத்தை கொடுத்துவிடுகிறேன் தனிநபர் கேட்டால் எவ்வாறு கொடுப்பேன் என்று கூறினேன். நான் காவல் நிலையத்தில் இருந்து வெளியே வந்துவிட்டு தாசில்தாரை பார்க்கச் சென்றேன். அவரும் உனக்கு இந்த இடத்தில் உரிமை கிடையாது நீ வெளியேறு என்று கூறினார். கிராம நிர்வாக அலுவலரும் அவ்வாறே கூறினார்.

3.) நான் என் நிலத்தினை சுற்றி முள்வேலி போட்டேன். அந்த முள்வேலியையும் JCB வாகனத்தினை வைத்து அகற்றினார். அங்கு 10 போலீசார்களை அழைத்தார். அங்கு போலீசார்கள் வந்தனர் . பின்பு போலீசார் அவர்கள் இடத்தில் நீ ஏன் முள்வேலி போட்டு இருக்கிறாய் என்று கூறி என் மீதும் என் தம்பி மகன்கள் மீதும் புகார் பதிவு செய்தார்கள் ஆகையால் எனக்கு நீதி வேண்டி நீதிமன்றத்தினை நாடி வந்துள்ளேன். மேற்கண்ட நபர்கள் மீது தக்க நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

Taken down by me in the open court in the presence of accused read over to the witness and admitted by him to be correct

FAZIL MOHAMED H

Digitally signed by FAZIL MOHAMED H
Date: 2025.06.25 16:52:58 +0530

Judicial Magistrate,
Andipatti.